[2011 செப்டம்பர் 8

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் இப்பொழுது வாக்காளர் அடையாள அட்டையைப்பற்றி இங்கே பேசிக்கொண்டிருக்கின்றோம். பாஸ்போர்ட் என்பது வேறு; சிறப்புக் கோரிக்கையின்கீழ் வருகின்றது. போலி வாக்காளர் பட்டியலைப்பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். பொதுவாக இந்தியத் தேர்தல் ஆணையத்தினுடைய உத்தரவினைப்பெற்று வாக்காளர் பெயர் சரிபார்க்கின்ற பணிக்கான கடமையைச் செய்கின்றபொழுது, போலி வாக்காளர்களை அடையாளம்கண்டு, போலி வாக்காளர்களை நீக்குகின்ற பணியும் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 96, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. வைரமுத்து, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

96—

கூட்டுக் குடிநீர்

***394—திரு. பி.கே. வைரமுத்து:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமயம் தொகுதி, திருமயம் பொன்னமராவதி, அரிமளம் ஆகிய ஒன்றியங்களில் காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருமயம் தொகுதி, திருமயம், பொன்னமராவதி, அரிமளம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள அனைத்துக் குடியிருப்புகளுக்கும் காவிரிக் குடிநீர்த் திட்டம் விரிவுபடுத்தப்பட்டு, புதுக்கோட்டை ஒன்றியத்தில் 13 குடியிருப்புகள், விராலிமலை ஒன்றியத்தில் 503 குடியிருப்புகள்,

2011 செப்டம்பர் 8]

குன்னாண்டார்கோவில் ஒன்றியத்தில் 48 குடியிருப்புகள், அன்னவாசல் ஒன்றியத்தில் 395 குடியிருப்புகள், பொன்னமராவதி ஒன்றியத்தில் 297 குடியிருப்புகள், திருமயம் ஒன்றியத்தில் 274 குடியிருப்புகள், அரிமளம் ஒன்றியத்தில் 199 குடியிருப்புகள் மற்றும் சிவகங்கை மாவட்டம் எஸ். புதூர் ஒன்றியத்தில் 124 குடியிருப்புகள், ஆக மொத்தம் 1853 குடியிருப்புகளுக்குக் காவிரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட உள்ளது. ஆய்வுப் பணிகள் முடிக்கப்பெற்று, திட்ட மதிப்பீடு இறுதி செய்யப்பட்டவுடன், நிருவாக ஒப்புதல் பெற்ற பின்னர், திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. வைரமுத்து அவர்கள்.*

திரு. பி.கே. வைரமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழும் மனித தெய்வம், எங்களின் இதய தெய்வம், மாற்றம் தந்த மக்களுக்கு ஏற்றம் தந்த எங்கள் அம்மா, ஜனநாயகத்தின் முகம், சத்தியத்தின் முகவரி, ஏழைகளுக்கு இறைவன், எங்களுக்கெல்லாம் "எல்லாம் வல்ல பரம்பொருள்" (மேசையைத் தட்டும் ஒலி) காலம் வழங்கிய நன்கொடை, 'எல்லாரும் எல்லாமும் பெறவேண்டும், இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்' என்ற பாட்டு வரிகளுக்கேற்ப கேட்கின்ற அத்துணைக் கோரிக்கைகளையும் நிறைவேற்றுகின்ற கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிவோடு வணங்குகிறேன். திருமயம் தொகுதிக்குட்பட்ட பொன்னமராவதி, திருமயம், அரிமளம் ஆகிய ஒன்றியங்கள் முழுக்க இரண்டு பேரூராட்சிகளுக்குட்பட்ட கிராம ஊராட்சிகளையும், குக்கிராமங்களையும் கொண்ட பகுதிகளாகும். நகர்ப்புறங்களுக்குக் கிடைக்கக்கூடிய காவிரி நீர், கிராமப்புறங்களுக்குக் கிடைக்கவில்லை என்ற நீண்டநாள் ஏக்கத்தைப் போக்கும் வகையிலும் அவர்களின் தாகத்தைத் தீர்க்கும் வகையிலும், இதய தெய்வம் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் அரசு, இந்த ஆண்டிலேயே அந்தத் திட்டம் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்ற அறிவிப்புக்கு, திருமயம் தொகுதி மக்களின் சார்பிலேயும் என் சார்பிலேயும் நெஞ்சார்ந்த நன்றிகளைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?*

இந்த நிதியாண்டிலேயே பணிகள் துவக்கப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமயம் தொகுதியில் இப்போது இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் வாயிலாக 176 குடியிருப்புகளுக்குத் தண்ணீர் கிடைத்துக்கொண்டு இருக்கிறது. மீதமுள்ள 1,383 குடியிருப்புகளுக்கும் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்த இருக்கிறோம். ஆய்வுப் பணிகள் முடிவுபெற்று காவிரி ஆற்றின் எந்தப் பகுதியில் தண்ணீர் எடுத்தால் நேரிடையாக நீர் செல்லும் என்பதை ஆய்வு செய்து, பின்பு ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு, ஆய்வுக்கு எடுத்து, பணிகள் நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. வைரமுத்து அவர்கள்.*

திரு. பி.கே. வைரமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கழக நிரந்தரப் பொதுச் செயலாளர், தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.*

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில்தான் ஒவ்வொரு முறையும் புதுக்கோட்டை மாவட்ட மக்கள் பயன்படுத்துகின்ற அளவுக்குக் காவிரித் தண்ணீர் கிடைத்திருக்கிறது. அதைப்போல, இந்த ஆண்டும் திட்டங்கள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று*

2011 செப்டம்பர் 8]

அறிவித்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசுக்கும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், விராலிமலை தொகுதி மக்களுடைய சார்பிலே, மாவட்ட மக்கள் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. செல்வராஜு அவர்கள். (குறுக்கீடு) உறுப்பினர் நன்றி சொல்லிவிட்டார். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எவ்வளவு தொலைநோக்குப் பார்வையோடு இந்தத் திட்டத்தை அறிவித்திருக்கிறார் என்பதை இந்த அவையில் சொல்வது கடமை என்கின்ற காரணத்தினால், உறுப்பினர் நன்றி கூறினாலும், அந்தக் கருத்தை இங்கே சொல்ல விழைகிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த நிதியாண்டிலேயே புதிய அறிவிப்புகளை அறிவித்திருக்கிறார்கள். அதனடிப்படையிலே புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த, புதுக்கோட்டை, விராலிமலை, அன்னவாசல், பொன்னமராவதி, குன்னாண்டார்கோவில், திருமயம், அரிமளம், கந்தர்வக்கோட்டை, அறந்தாங்கி, கரம்பக்குடி, திருவரங்குளம் ஒன்றியங்களைச் சேர்ந்த 3,557 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.புதூர், கல்லல் மற்றும் சாக்கோட்டை ஒன்றியங்களைச் சேர்ந்த 127 ஊரகக் குடியிருப்புகள் பயனடையும் வகையில் காவிரி மற்றும் கொள்ளிடம் ஆற்றினை நீராதாரங்களாகக் கொண்டு சுமார் 12 இலட்சத்து 27 ஆயிரம் மக்கள் பயனடைகின்ற வகையிலே இந்தக் குடிநீர்த் திட்டம் இந்த நிதியாண்டிலேயே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள் என்பதை இந்த அவையிலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எம்.கே. செல்வராஜு, டாக்டர் ச. சுந்தரராஜ், திரு. ம. முத்துராமலிங்கம், உங்களுக்கு இதுசம்பந்தமாக மேலும் என்ன கேள்வி இருக்கிறது? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவாக அவருடைய பதிலிலே குறிப்பிட்டிருக்கின்றார். இதுதவிர*

உங்களுக்கு என்ன கேள்வி இருக்கிறது? (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. செல்வராஜு அவர்கள்.

திரு. எம்.கே. செல்வராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குப் பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். சேலம் மாநகராட்சிக்கு என்று தனியாகக் குடிநீர்த் திட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்தக் குடிநீர்த் திட்டம் எவ்வளவு காலத்தில் முடிக்கப்படும்? ஏனென்றால் நீண்டகாலமாகத் திட்டம் நடைபெறுகிறது. கடந்த மைனாரிட்டி தி.மு.க. அரசு அந்தத் திட்டத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரும்போது ஏகப்பட்ட குளறுபடிகளைச் செய்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், கேள்விக்கு வாருங்கள்.

முற்பகல் 10–15

திரு. எம்.கே. செல்வராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் சொல்கிறேன். அதிகமான கையூட்டு பெற்றுக்கொண்டு, அந்தத் திட்டத்தை ஒருவருக்கு தாரை வார்த்துக் கொடுத்திருக்கிறார்கள். இருந்தாலும், அந்தத் திட்டப் பணிகள் முடிய இன்னும் எவ்வளவு காலமாகும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதற்குத் தனி வினா எழுப்பும்படி மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.

திரு. ம. முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘கேளுங்கள் கொடுக்கப்படும், தட்டுங்கள் திறக்கப்படும்” என்று சொல்வதற்கேற்ப, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கேட்காமலேயே தமிழ்நாட்டு

2011 செப்டம்பர் 8]

மக்களுக்கு நலத் திட்டங்களை அள்ளி வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆண்டிப்பட்டி சட்டமன்ற உறுப்பினராக இருந்தபொழுது, 'ஆண்டிப்பட்டி–உசிலம்பட்டி–சேடப்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை' உருவாக்கித் தந்தார்கள். ஆனால், அந்தத் திட்டம் மாண்புமிகு அம்மா அவர்களால் தொடங்கப்பட்டது என்ற காரணத்தினால், கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சி அந்தத் திட்டத்தைக் கிடப்பில் போட்டுவிட்டது. அந்தப் பகுதியிலுள்ள குழாய்களெல்லாம் உடைந்து தண்ணீர் வீணாகிச் சென்று கொண்டிருப்பதைக் கண்டுகொள்ளாமல் விட்டுவிட்டது. எனவே, அந்தப் பகுதியிலுள்ள மக்களுக்கு முழுமையாகத் தண்ணீர் கிடைப்பதற்கு வாய்ப்பில்லாமல் போய்விட்டது. இன்றைக்கு ஜனத்தொகை பெருகி, வளர்ந்து வரக்கூடிய காரணத்தினால். ஆண்டிப்பட்டி–உசிலம்பட்டி–சேடப்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் போடப்பட்ட பழுதடைந்த குழாய்களையெல்லாம் பழுது நீக்கி, மக்களுக்கு முழுமையாகத் தண்ணீர் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், நேற்றைய நீதித் துறை மானியக் கோரிக்கையில், என்னுடைய திருமங்கலம் தொகுதி, பேரையூருக்கு ஒரு நீதிமன்றத்தினை அறிவித்ததற்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே எழுப்பிய வினாவிற்கு, அந்தப் பகுதியிலுள்ள குடிநீர்த் திட்டத்தினுடைய நிலையை ஆய்வு செய்து, சீர்படுத்தி, சீரான தண்ணீர் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 97, மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. ராமச்சந்திரன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு*

உறுப்பினர் திரு. கா. ராமச்சந்திரன் அவர்கள் இருக்கையில் இல்லை. மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், உங்களுடைய பதிலைச் சொல்லுங்கள்.

97—

கல்லூரி

***1267 திரு. கா. ராமச்சந்திரன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில் பொறியியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) நீலகிரி மாவட்டத்தில் பொறியியல் கல்லூரி துவக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை நான் இந்தப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. ராமச்சந்திரன் அவர்கள், சென்ற ஆட்சியில் அமைச்சராக இருந்திருக்கிறார். அவர் அந்த நேரத்தில் தூங்கிவிட்டார் என்றே நினைக்கிறேன். அவருக்கு அங்கே வாய்ப்பு இருந்தபோது தன்னுடைய தொகுதி மக்களுக்காகச் செய்யாமல் இருந்துவிட்டு, இன்று அவர் அதைக் கேட்கிறார். இருந்தாலும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்திலே இருக்கக்கூடிய உயர் கல்வியின் தரத்தினை உயர்த்தும்பொருட்டு பல்வேறு நல்ல திட்டங்களைச் செய்து வருகிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றிகூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 98, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். சாந்தி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*